# திண்ணை பயிற்சிப்பட்டறை - தேனி

## TNPSC GROUP I, II, IIA, IV, VAO - 2024

## 20TH BATCH – TEST 5

Mobile: 93614 82208, 99409 70325 Email id: thinnaimail@gmail.com

## திண்ணை உறுதிமொழி

இரக்கமும் கருணையும் இருகண்களாகட்டும்!
இதழ்கள் இரண்டிலும் புன்னகை மலரட்டும்!
உழைப்பும், உறுதியும் இருதோள்களாகட்டும்!
நேர்மை ஒன்றையே நெஞ்சம் தாங்கட்டும்!
இடதும் வலதும் இணைந்த கரங்களாகட்டும்!
இதயம் என்றும் அன்பால் துடிக்கட்டும்!
தடைகளைத் தாண்டி கால்கள் ஓடட்டும்!
கொட்டும் வியர்வையே மூலதனமாகட்டும்!
சாதி, மதம் பேதம் ஒழிப்போம்!
பதவி பணம் தரும் கர்வம் தவிர்ப்போம்!
லட்சியம் விதைத்து வெற்றியை அடைந்து!
லஞ்சம் தவிர்த்து நெஞ்சை நிமிர்த்து!
அறத்தின் வழிநின்று மனிதம் போற்று!!

திண்ணை

1) அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே என்ற பாடல்வரி யாருடையது?
   A) தேவநேயப் பாவணார் B) தனித்தமிழ் மறவர் C) இளங்குமரனார் D) திரு.வி.க
   E) விடை தெரியவில்லை
2) தவறான இணையைத் தேர்ந்தெடு.
   A) சண்டு - காய்ந்த இலை B) கட்டை - காய்ந்த கொம்பும், கவையும்
   C) செம்மல் - பூ வாடின நிலை D) போது - பூ விரியத்தொடங்கும் நிலை E) விடை தெரியவில்லை
3) “முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால் மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்” என்னும் வரி யாருடையது?
   A) சந்தக்கவிமணி B) தேவநேயப்பாவணார் C) பெருஞ்சித்திரனார் D) எழில் முதல்வன்
   E) விடை தெரியவில்லை
4) படிப்பவருக்கு முரண்படுவதுபோல தோன்றும் ஆனால் உண்மையில் முரண்படாத மெய்ம்மையைச் சொல்வது எது?
   A) இலக்கணை B) முரண்படு மெய்ம்மை C) சொல் முரண் D) எதிரிணை இசைவு
   E) விடை தெரியவில்லை
5) கூற்று 1 : நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி வளிதொழில் ஆண்ட உரவோன் மருக என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல்?
   A) புறநானூறு B) சிலப்பதிகாரம் C) மணிமேகலை D) அகநானூறு E) விடை தெரியவில்லை
6) பொருத்துக.
   a. ப்ராண ரஸம் - 1. பெறுதல்
   b. லயத்துடன் - 2. மயங்கச்செய்
   c. மேவலால் - 3. தருதல்
   d. துய்ப்பது - 4. சீராக
   e. மயலுறுத்து - 5. உயிர்வளி
   A) 5 4 1 2 3 B) 5 1 4 3 2 C) 5 4 1 3 2 D) 5 4 1 2 3 E) விடை தெரியவில்லை
7) கூற்று 1 : முல்லைப்பாட்டு வெண்பாவால் இயற்றப்பட்டது.
   கூற்று 2 : முல்லைப்பாட்டின் ஆசிரியர் காவிரிப் பூம்பட்டினத்து பெருவணிகனார் மகன் நல்லந்துவனார் ஆவார்.
   A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு E) விடை தெரியவில்லை
8) கூற்று 1 : காலம் காட்டும் இடைநிலையையும், வினையெச்ச விகுதியும் மறைந்து நிற்பது வினைத்தொகை எனப்படும்.
   கூற்று 2 : வட்டத்தொட்டி என்பது ஒரு பண்புத்தொகை.
   A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை
9) விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கம் மொத்தம் 9 என கூறும் நூல்?
   A) தொல்காப்பியம் B) விவேக சிந்தாமணி C) காசிக்காண்டம் D) சிலப்பதிகாரம்
   E) விடை தெரியவில்லை
10) கூற்று 1 : தொகாநிலைத் தொடர்கள் மொத்தம் ஒன்பது வகைப்படும்.
   கூற்று 2 : எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகள் தொடர்வது விளித்தொடர் எனப்படும்.
   A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு E) விடை தெரியவில்லை
11) தன் செயலுக்கு இடையூராக வரும் முன்வினையையும் தோற்கடித்து வெற்றியடைபவர் என திருவள்ளுவர் கூறுவது?
   A) ஒழுக்கத்துடன் வாழ்பவர் B) சோர்விலாது முயற்சி செய்து வாழ்பவர்
   C) பெரியோரை துணையாக்கி வாழ்பவர் D) தீயவரின் நட்பை விட்டு நற்பண்புகளுடன் வாழ்பவர்
   E) விடை தெரியவில்லை
12) சாகும் போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும் என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேக வேண்டும் என்ற வரி யாருடையது?
   A) தேவநேயப்பாவணார் B) பாவலரேறு பெருஞ்சித்திரனார் C) சச்சிதானந்தன் D) திரு.வி.க
   E) விடை தெரியவில்லை

13) வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும் என்ற பாடல்வரி இடம் பெற்றுள்ள நூல் எது?
A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை C) ஐங்குறுநூறு D) அகநானூறு E) விடை தெரியவில்லை

14) மென்துகிலாய் உடல்வருடி வாஞ்சனையுடன் மனம் வருடி பகலெரிச்சல் பணக்கவலை பயக்குழப்பம் என்ற கவிதை வரி யாருடையது?
A) பாரதியார் B) அப்துல்ரகுமான் C) கண்ணதாசன் D) தேவகோட்டை வ.மூர்த்தி
E) விடை தெரியவில்லை

15) கூற்றுகளை ஆராய்க. (கி.ரா)
1. கோபல்லபுரத்து மக்கள் என்னும் புதினத்தை தொடர்ந்து எழுதப்பட்ட கதையே கோபல்ல கிராமம்.
2. கி.ரா தன் சொந்த ஊரான கோவில்பட்டி மக்களின் வாழ்வியல் காட்சிகளுடன் கற்பனையையும் புகுத்தி இந்நூலினைப் படைத்துள்ளார்.
3. இந்திய விடுதலைப் போராட்டத்தினை பின்னனியாக கொண்டது கோபல்ல கிராமம்.
4. கி.ராவின் கோபல்ல கிராமம் என்னும் நூல் 1991ல் சாகித்ய அகாதெமி விருதை பெற்றுள்ளது.
A) அனைத்தும் சரி B) 1, 2, 4 சரி C) 1, 3, 4 சரி D) அனைத்தும் தவறு
E) விடை தெரியவில்லை

16) தாதுகு சோலைதோறும் செண்பகக்காடு தோறும் என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல்?
A) கம்பராமாயணம் B) நீதிநெறி விளக்கம் C) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்
D) நீதிவெண்பா E) விடை தெரியவில்லை

17) கூற்று 1 : இராஜஸ்தானில் குதிரைக்களி என்றும், கேரளாவில் கட்சிக்கொடி என்றும் பொய்க்கால் குதிரையாட்டம் அழைக்கப்படுகிறது.
கூற்று 2 : தொல்காப்பியம் குறிப்பிடும் கருப்பொருள்களில் ஒன்றாகப் பறை இடம்பெற்றுள்ளது.
A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

18) கூற்று 1 : செய்யுளில் சொற்களை பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்தோ மாற்றியோ பொருள் கொள்ளும் முறைக்குப் பொருள்கோள் எனப்படும்.
கூற்று 2 : பொருள்கோள்கள் எட்டு வகைப்படும்.
A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு E) விடை தெரியவில்லை

19) அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி மருளை அகற்றி என்ற பாடல்வரி யாருடையது?
A) குமரகுருபரர் B) பரஞ்சோதி முனிவர் C) செய்குதம்பி பாவலர் D) ஔவையார்
E) விடை தெரியவில்லை

20) தலைவிதி தான் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது என நம்புபவர்களைப் பார்த்தால் எனக்கு சிரிப்புதான் வருகிறது என்று கூறியவர்?
A) ஜான் வீலர் B) ஹாக்கிங் C) ஐன்ஸ்டீன் D) நியூட்டன் E) விடை தெரியவில்லை

21) கூற்று 1 : நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் பெருமாள் திருமொழி ஐந்தாம் திருமொழியாக இரண்டாமாயிரத்தில் வைக்கப்பட்டுள்ளது.
கூற்று 2 : இதனை பாடிய குலசேகராழ்வார் 9-ம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.
A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

22) ஒரு நிலத்தின் தெய்வம், மக்கள், தொழில், விலங்கு இவையெல்லாம் எவ்வகைப் பொருள்கள்?
A) முதற்பொருள் B) கருப்பொருள் C) உரிப்பொருள் D) ஏதுமில்லை E) விடை தெரியவில்லை

23) கூற்று 1 : கம்பர் சேரநாட்டு திருவெழுந்தூரைச் சேர்ந்தவர்.
கூற்று 2 : திருநெல்வேலி சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர்.
A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு E) விடை தெரியவில்லை

24) கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே என்று கூறும் நூல்?
A) கொன்றை வேந்தன் B) நரிவிருத்தம் C) வெற்றி வேற்கை D) B&C E) விடை தெரியவில்லை

25) கூற்று 1 : ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு - ஜகந்நாத ராஜா.
கூற்று 2 : ஒரு மொழி வளம் பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாதது - மணவை முஸ்தபா.
A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

திண்ணை

26) விசும்பில் ஊழிய ஊழ் ஊழ் செல்லக் கருவளர் வானத்து என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல்?
A) புறநானூறு B) இரட்டுற மொழிதல் C) பரிபாடல் D) பதிற்றுப்பத்து
E) விடை தெரியவில்லை

27) கூற்று 1 : திருக்குறளில் மரப்பாவை பற்றி கூறப்பட்டுள்ளது.
கூற்று 2 : திருவாசகத்திலும், அருணகிரிநாதரின் பாடல்களிலும் தோற்பாவைக் கூத்து பற்றியும் கூறப்பட்டுள்ளது.
A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

28) சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள் இறுக்கி முடிச்சிட்டால் காம்புகளின் கழுத்து முறியும் என்ற வரி யாருடையது?
A) கலாப்பிரியா B) உமாமகேஸ்வரி C) லட்சுமி D) கோமகள் E) விடை தெரியவில்லை

29) கூற்றுகளை ஆராய்க. (கந்தசாமி)
1. தக்கையின் மீது நான்கு கண்கள் என்ற கதை பாய்ச்சல் என்னும் சிறுகதை தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.
2. கந்தசாமி அவர்கள் நாகப்பட்டின மாவட்டம் மயிலாடுதுறையைச் சேர்ந்தவர்.
3. விசாரணை கமிஷன் என்னும் புதினத்திற்கு சாகித்ய அகாதெமி விருதைப் பெற்றுள்ளார்.
4. தொலைந்து போனவர்கள் என்னும் குறும்படத்திற்கு அனைத்துலக விருதை வென்றவர்.
A) அனைத்தும் சரி B) 2, 3 சரி C) 1, 4 சரி D) 1, 2, 4 சரி E) விடை தெரியவில்லை

30) கூற்றுகளை ஆராய்க.
1. திருவிளையாடற்புராணம் 3 காண்டம், 64 படலம், 3363 விருத்தப்பாக்களை கொண்டுள்ளது.
2. பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் பரஞ்சோதி முனிவர்.
3. பரஞ்சோதி முனிவர் திருமால் மீது அதிக பக்தி கொண்டவர்.
4. பரஞ்சோதி முனிவர் வேதாரண்ய புராணம், திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பத்தந்தாதி போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.
A) அனைத்தும் சரி B) 1, 3, 4 சரி C) 1, 2, 4 சரி D) 1, 2, 3 சரி E) விடை தெரியவில்லை

31) கூற்று 1 : இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவரைக் குழந்தையாக பாடுவது பிள்ளைத்தமிழ் இலக்கியம்.
கூற்று 2 : பிள்ளைத்தமிழ் மொத்தம் 100 பாடல்களைக் கொண்டிருக்கும் மற்றும் பிள்ளைத்தமிழ் மூன்று வகைப்படும்.
A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

32) மேரி மெக்லியூட் பெத்யூன் மாபெரும் கல்வியாளரின் வாழ்க்கையை உனக்கு படிக்க தெரியாது என்ற தலைப்பில் நூலாக படைத்தவர்?
A) கமலாலயன் B) கந்தசாமி C) குணசேகரன் D) A&C E) விடை தெரியவில்லை

33) கூற்று 1 : SBI வங்கியானது இலா என்னும் உரையாடு மென்பொருளை உருவாக்கியிருக்கிறது. இது ஒரே நேரத்தில் ஒரு கோடி வாடிக்கையாளர்களிடம் உரையாடும்.
கூற்று 2 : ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர். உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ.
A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

34) கூற்று 1 : விடை மொத்தம் 8 வகைப்படும்.
கூற்று 2 : முதல் ஐந்து விடைகளும் குறிப்பாக இருப்பதால் குறிப்பு விடைகள் எனவும், கடைசி மூன்று வகையும் நேரடி விடைகளாக இருப்பதால் இவை வெளிப்படை விடைகள் எனப்படும்.
A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு E) விடை தெரியவில்லை

35) ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்கான இரண்டு வழிகள் என மா.பொ.சி. கூறியது?
A) விடாமுயற்சி, ஒழுக்கம் B) கல்வி, ஒழுக்கம் C) நம்பிக்கை, விடாமுயற்சி, கல்வி, கேள்வி, ஒழுக்கம்
D) கல்வி, கேள்வி E) விடை தெரியவில்லை

36) பொருத்துக.
a. சுண்ணம் - 1. செல்வம்
b. வெறுக்கை - 2. சிற்பி
c. மண்ணீட்டாளர் - 3. நறுமணப்பொடி

d. கிழி - 4. விலை

e. நொடை - 5. துணி

A) 3 1 2 4 5 B) 3 2 1 5 4 C) 3 2 1 4 5 D) 3 1 2 5 4 E) விடை தெரியவில்லை

37) கூற்று 1 : உரைப்பாட்டு மடை என்பது சிலப்பதிகாரத்தில் வரும் தமிழ்நடை.
கூற்று 2 : சிலப்பதிகாரம் முத்தமிழ் காப்பியம் (ம) குடிமக்கள் காப்பியம் என்று அழைக்கப்படுகிறது.
A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

38) கூற்று 1 : இரண்டடி முதல் பன்னிரண்டு அடிவரை அமைவது வெண்பா.
கூற்று 2 : ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என முடிவது வெண்பா வகை.
A) 1, 2 தவறு B) 1 மட்டும் தவறு C) 2 மட்டும் தவறு D) 1, 2 சரி E) விடை தெரியவில்லை

39) கூற்றுகளை ஆராய்க.
1. தேம்பாவணியின் பாட்டுடைத் தலைவர் கிறிஸ்து இயேசு.
2. தேம்பாவணி 3 காண்டம், 36 படலங்கள், 3615 பாடல்களைக் கொண்டுள்ளது.
3. 17ம் நூற்றாண்டில் படைக்கப்பட்டது தேம்பாவணி.
4. வீரமாமுனிவரின் இயற்பெயர் கான்ஸ்டான்சு ஜோசப் பெஸ்கி.
A) அனைத்தும் சரி B) 1, 2, 3 சரி C) 2, 3, 4 சரி D) 1, 2, 4 சரி E) விடை தெரியவில்லை

40) தம்மைவிட வலிமை குறைந்தவரோடு போர் செய்வது கூடாது என்பதை கூறியவர்?
A) முடமோசியார் B) கோவூர் கிழார் C) மூலங்கிழார் D) மாங்குடி மருதனார்
E) விடை தெரியவில்லை

41) பொற்காலமாக இருந்தாலும் இவள் தலையில் எழுதியதோ கற்காலம் தான் எப்போதும் என்ற கவிதை வரி யாருடையது?
A) நாகூர் ரூமி B) முகமது ர.ஃபி C) கண்ணதாசன் D) A&B E) விடை தெரியவில்லை

42) கூற்று 1 : கி.பி. 2-ம் நூற்றாண்டில் தமிழ் வணிகருக்கும் எகிப்து நாட்டு அலெக்சாண்ட்ரியா துறைமுகத்தில் வாழ்ந்த கிரேக்க வணிகருக்கும் இடையிலான ஒப்பந்தம் வியன்னா அருங்காட்சியகத்தில் காணப்படுகிறது.
கூற்று 2 : சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கட மலையாகவும், தெற்கெல்லை குமரி முனையாகவும் கூறப்படுகிறது.
A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

43) கூற்று 1 : தமிழில் எழுதிய பெண்களில் முதன் முதலில் களத்திற்குச் சென்று மக்களிடம் செய்திகளைத் திரட்டியவர் ராஜம் கிருஷ்ணன்.
கூற்று 2 : சாகித்ய அகாதெமி விருதுபெற்ற முதல் பெண் எழுத்தாளர்.
A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

44) கூற்று 1 : பொய்யா செந்நா - புறநானூறு.
கூற்று 2 : பொய்படுஅறியா வயங்கு செந்நா - பதிற்றுப்பத்து.
A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு E) விடை தெரியவில்லை

45) தூசும் துகிரும் ஆரமும் அகிலும் மாசுஅறு முத்தும் மணியும் என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல்?
A) புறநானூறு B) மணிமேகலை C) சிலப்பதிகாரம் D) மதுரைக்காஞ்சி E) விடை தெரியவில்லை

46) கூற்று 1 : தி.சோ.வேணுகோபால் திருவாரூரில் பிறந்தவர். மணிப்பால் பொறியியல் கல்லூரியில் எந்திரவியல் பேராசிரியராக பணியாற்றியவர்.
கூற்று 2 : தி.சோ.வேணுகோபாலனின் கவிதைத் தொகுப்பு கோடைவயல் (ம) மீட்சி விண்ணப்பம்.
A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

47) கூற்று 1 : கோப்பரகேசரி (ம) திரிபுவனச் சக்கரவர்த்தி என்ற பட்டங்களை உடையவர் இராசராச சோழன்.
கூற்று 2 : இராசராச சோழனின் மெய்கீர்த்திகள் இரண்டு அதில் ஒன்று 91 வரிகளைக் கொண்டது.
கூற்று 3 : பல்லவர்கள் காலத்திலிருந்தே மெய்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டுள்ளன.
கூற்று 4 : மெய்கீர்த்திகளே கல்வெட்டின் முதல் பகுதியில் மன்னனின் முன்னோர்களை புகழ்ந்து இலக்கிய நயம்பட எழுதப்படும் வரிகள்.
A) 1, 2, 4 தவறு B) 1, 2, 3 தவறு C) 2, 3, 4 தவறு D) அனைத்தும் தவறு
E) விடை தெரியவில்லை

48) கூற்று 1 : 1902, கும்பகோணத்தில் பிறந்தார் கு.ப.ரா.
கூற்று 2 : இவரின் மறைவுக்கு பின்னர் அகலிகை (ம) ஆத்ம சிந்தனை போன்றவை நூல்களாக தொகுக்கப்பட்டுள்ளன.
A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

49) கவிஞன் யானோர் காலக்கணிதம் கருப்படு பொருளை உருப்பட வைப்பேன் என்ற பாடல்வரி யாருடையது?
A) நாணற்காடன் B) பாரதி C) தமிழ் நெஞ்சன் D) முத்தையா E) விடை தெரியவில்லை

50) கூற்று 1 : சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப் படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிரையணி எனப்படும்.
கூற்று 2 : தன்மை நவிற்சி அணி மூன்று வகைப்படும்.
A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

51) முதன் முதலில் கருவிகள் செய்த மனித மூதாதையர் இனம்?
A) நியாண்டர்தால் B) ஹோமோஹெபிலிஸ் C) ஹோமோ எரக்டஸ்
D) ஆஸ்ட்ரோபித்திசின் E) விடை தெரியவில்லை

52) கைக்கோடாரிக் கருவிகள் எனப்படும் அச்சூலியன் கருவிகள் பயன்படுத்தப்பட்ட காலம்?
A) தொடக்ககாலப் பண்பாடுகள் B) இடைக்காலப் பண்பாடுகள்
C) கீழ் பழங்கற்காலப் பண்பாடுகள் D) இடைப்பழங்கற்காலம் E) விடை தெரியவில்லை

53) கூற்று 1 : 1863ல் ராபர்ட் புரூஸ்பூட் என்ற இங்கிலாந்து நிலவியலாளர் பல்லாவரத்தில் முதன் முதலில் பழங்காலக் கற்கருவிகளைக் கண்டறிந்தார்.
கூற்று 2 : கண்டெடுத்த கருவிகள் சென்னை அருங்காட்கியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.
A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 சரி D) 2 சரி E) விடை தெரியவில்லை

54) பொருத்துக.
a. ஹரப்பா - 1. பஞ்சாப்
b. சுர்கொட்டா - 2. குஜராத்
c. ராகிகர்கி - 3. சிந்து
d. காலிபங்கன் - 4. ஹரியானா
e. மொகஞ்சதரோ - 5. ராஜஸ்தான்
A) 1 2 3 4 5 B) 1 2 4 5 3 C) 1 4 2 5 3 D) 1 2 4 5 3 E) விடை தெரியவில்லை

55) கூற்றுகளை ஆராய்க. (சிந்துவெளி நாகரிகம்)
1. ஹரப்பா மக்களின் முதன்மைத் தொழில் வேளாண்மை.
2. ஹரப்பாவில் மாடுகள் ஜெபு என அழைக்கப்பட்டனர்.
3. மொகஞ்சதரோவில் பூசாரி அரசன் உருவம் கிடைத்துள்ளது.
4. ஹரப்பா முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட நகரம் என்பதால் சிந்துவெளி நாகரிகம் ஹரப்பா நாகரிகம் என அழைக்கப்படுகிறது.
A) அனைத்தும் சரி B) 3 தவறு C) 4 தவறு D) 1 தவறு E) விடை தெரியவில்லை

56) எங்கு கிடைக்கப்பெற்ற சான்றுகளின் அடிப்படையில் உலோகத்தை உருக்கி ஊற்றி சிலை வார்க்கும் லாஸ்ட் வேக்ஸ் தொழில்நுட்பம் செயல்முறை தெரிந்திருப்பதை கண்டறிந்தனர்?
A) லோத்தல் B) ராகிகர்கி C) காலிபங்கன் D) மொகஞ்சதரோ E) விடை தெரியவில்லை

57) கூற்றுகளை ஆராய்க.
1. தமிழின் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம்.
2. தொல்காப்பியத்தின் முதல் இரண்டு பகுதி தமிழ் மொழியின் இலக்கணத்தையும், கடைசி பகுதி மக்களின் சமூக வாழ்க்கையையும் வரையறுக்கிறது.
3. பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என அழைக்கப்படுகின்றன.
4. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காலத்தால் முற்பட்டவை எனவும், பதினெண் மேல்கணக்கு நூல்கள் காலத்தால் பிந்தையவை எனவும் அழைக்கப்பட்டன.
A) 1, 2 சரி B) 2, 3 சரி C) 3, 4 சரி D) 1, 4 சரி E) விடை தெரியவில்லை

58) கடல்ஊர் ஆகோள் பெடுதீயன் அந்தவன்கல் என்று பொறிக்கப்பட்ட நடுகல் கிடைத்துள்ள இடம்?
A) பொற்பனைக்கோட்டை B) மாங்குளம் C) அரச்சலூர் D) புலிமான்கோம்பை
E) விடை தெரியவில்லை

59) கூற்று 1 : குப்தர் காலத்தில் வாழ்ந்த கௌடில்யர் எழுதிய அர்த்தசாஸ்திரதில் பாண்டிய காவாடகா என்ற குறிப்பு பாண்டிய நாட்டைக் குறிக்கிறது.
கூற்று 2 : தென் இந்தியா (ம) தமிழ்நாட்டில் வாழ்ந்த வணிகர்கள் குறித்தும், குதிரை வணிகர்கள் குறித்தும் அர்த்தசாஸ்திரம் கூறுகிறது.
A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு E) விடை தெரியவில்லை

திண்ணை

60) கூற்று 1 : ரோமானியரான மூத்த பிளினி இயற்கை வரலாறு என்ற நூலை கிரேக்க மொழியில் எழுதினார்.
கூற்று 2 : இந்தியாவுடன் நடைபெற்ற மிளகு வணிகம் குறித்தும், பாண்டிய மன்னர்கள் குறித்தும் பிளினி கூறுகிறார்.
A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

61) கூற்று 1 : சங்ககாலத்திற்கான அடித்தளம் புதிய கற்காலத்தில் வேர் கொண்டது.
கூற்று 2 : அசோகரது கல்வெட்டில் சேரர்கள் கேரள புத்திரர்கள் என குறிக்கப்பட்டுள்ளனர்.
A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு E) விடை தெரியவில்லை

62) கூற்றுகளை ஆராய்க.
1. சேரர்கள் தங்களது தலைநகராக வஞ்சியும் துறைமுகப் பட்டினங்களாக முசிறியும், தொண்டியும் வைத்திருந்தனர்.
2. சேர அரசர்கள் குறித்து பத்துப்பாட்டு என்னும் நூல் கூறுகிறது.
3. புகளூர் கல்வெட்டு சேர மன்னர்களின் மூன்று தலைமுறை குறித்துக் கூறுகிறது.
4. சேர மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் கரூரில் கிடைத்துள்ளன.
A) அனைத்தும் சரி B) 1, 2, 4 சரி C) 1, 3, 4 சரி D) 2, 3, 4 சரி E) விடை தெரியவில்லை

63) சங்ககால சமூகத்தில் இரும்பு உருக்காலைகள் காணப்படும் இடம்?
A) ஆதிச்சநல்லூர் B) பட்டணம் C) கொடுமணல் D) மதுரை
E) விடை தெரியவில்லை

64) ஐந்து திணைகளையும், அவற்றிற்குரிய கடவுள்களைப் பற்றியும் கூறும் நூல்?
A) பதிற்றுப்பத்து B) பட்டினப்பாலை C) மதுரைக்காஞ்சி D) தொல்காப்பியம்
E) விடை தெரியவில்லை

65) கூற்று 1 : இலங்கையின் புத்த சமய வரலாற்றைக் கூறும் மகாவம்சம் என்ற நூல் அரேபிய மொழியில் எழுதப்பட்டது.
கூற்று 2 : தென்னிந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் இருந்த வணிகர்கள் குறித்தும் குதிரை வணிகர்கள் குறித்தும் இந்நூல் குறிப்பிடுகிறது.
A) கூற்று 1 சரி, 2தவறு B) கூற்று 1 தவறு, 2 சரி C) இரண்டு கூற்றுகளும் சரி
D) இரண்டு கூற்றுகளும் தவறு E) விடை தெரியவில்லை

66) சரியான கூற்றைத் தேர்ந்தெடு.
1) முஸ்லிம்கள் ஆட்சி, 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் முகமது கோரியால் டெல்லியில் நிறுவப்பட்டது.
2) முஸ்லிம் ஆட்சியின் தாக்கம் அலாவுதீன் கில்ஜியின் ஆட்சியின் போது உணரப்பட்டது.
3) அவர் தேவகிரி (அவுரங்காபாத்திற்கு அருகில்)யை கைப்பற்றினார்.
A) 1, 2 சரி 3 தவறு B) 1, 3 சரி 2 தவறு C) 1 சரி 2, 3 தவறு D) அனைத்தும் சரி
E) விடை தெரியவில்லை

67) கூற்று : கி.பி. (பொ.ஆ.) 1527இல் பாபர் இப்ராஹிம் லோடியை தோற்கடித்ததிலிருந்து வட இந்தியாவில் மொகலாயர் தலைமையில் முஸ்லிம்களின் ஆட்சியை ஒருங்கிணைத்து வலிமைப்படுத்தும் பணி துவங்கியது.
காரணம் : மொகலாயப் பேரரசு அதன் புகழின் உச்சத்தில் காபூரிலிருந்து குஜராத் மற்றும் வங்காளம் வரையிலும் காஷ்மீரத்திலிருந்து தென்னிந்தியா வரையிலும் பரவியிருந்தது.
A) கூற்று சரி, காரணம் தவறு B) கூற்று தவறு, காரணம் சரி C) கூற்று, காணரம் சரி
D) கூற்று, காரணம் தவறு E) விடை தெரியவில்லை

68) பின்வருவனவற்றில் தவறான கூற்றைத் தேர்ந்தெடு.
1. விஜயநகர நாயக்க அரசர்களின் ஆதரவில் பெருமளவிலான இலக்கியங்கள் குறிப்பாக சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட இலக்கியங்கள் உருவாயின.
2. அரச குடும்ப ஆதரவில் தெலுங்கு இலக்கியம் செழிப்புற்றது.
3. பிரபந்தம் எனப்படும் ஒரு புதிய வகைத் தமிழ் இலக்கியம் இக்காலத்தில் உருவானது.
A) 1 (ம) 2 B) 1 (ம) 3 C) 2 (ம) 3 D) இவற்றில் எதுவுமில்லை E) விடை தெரியவில்லை

69) கூற்று 1 : வளிமண்டலம் புவியின் அருகில் அடர்த்தி குறைவாகவும் உயரே செல்லச் செல்ல அடர்த்தி அதிகமாகவும் காணப்படுகிறது.
கூற்று 2 : வளிமண்டலம் மொத்தம் நான்கு அடுக்குகளை கொண்டுள்ளது.
A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

70) அரோரா ஆஸ்ட்ரியாலிஸ் (ம) அரோரா பொரியாலிஸ் என்ற விநோத ஒளி நிகழ்வுகள் நடைபெறும் அடுக்கு?
A) மேக்னட்டோஸ்பியர் B) எக்ஸோஸ்பியர் C) தெர்மோஸ்பியர் D) அயனோஸ்பியர்
E) விடை தெரியவில்லை

71) இயல்பு வெப்பக் குறைவு வீதம் என்பது?
A) 1°C B) 0°C C) 6.5°C D) 100°C E) விடை தெரியவில்லை

72) கூற்று 1 : வருடம் முழுவதும் நிலையாக ஒரே திசையை நோக்கி வீசும் காற்றுகள் நிலவும் காற்று எனப்படுகிறது.
கூற்று 2 : வியாபாரக் காற்றுகள், மேலைக் காற்றுகள், துருவ கீழைக் காற்றுகள் போன்றவை கோள் காற்றுகள் ஆகும்.
A) 1, 2 தவறு B) 1, 2 சரி C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

73) கூற்று 1 : சைக்ளோன் எனும் சொல்லிற்கு சுருண்ட பாம்பு என்று பொருள்.
கூற்று 2 : சூறாவளி வட அரைக்கோளத்தில் கடிகாரச் சுற்றுக்கு எதிர்த்திசையிலும், தென் அரைக்கோளத்தில் கடிகார திசையிலும் வீசுகிறது.
A) 1, 2 தவறு B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 சரி E) விடை தெரியவில்லை

74) தெளிவான வானிலையுடன் காணப்படும் மேகங்கள் எது?
A) கார்படை மேகம் B) கார்திரள் மேகம் C) திரள் மேகம் D) கீற்றுப்படை மேகம்
E) விடை தெரியவில்லை

75) ஆயிரம் ஏரிகளின் நிலம் என்று அழைக்கப்படுவது எது?
A) தாய்லாந்து B) பின்லாந்து C) ஜப்பான் D) ஆப்பிரிக்கா E) விடை தெரியவில்லை

76) கூற்று 1 : ஒரே அளவிலான உப்புத்தன்மை கொண்ட பகுதிகளை வரைபடத்தில் இணைக்கும் கற்பனைக் கோடு சமஉவர்ப்புக் கோடு.
கூற்று 2 : கடலின் ஆழத்தை அளவிடக் கூடிய ஓர் அலகு சம ஆழக்கோடு.
A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

77) மிதமான கோடை காலமும், நீண்ட குளிர்காலமும், குளிர்கால மழைப் பொழிவும் காணப்படும் இடம் எது?
A) தூந்திரப் பல்லுயிர் தொகுதி B) வெப்பமண்டல சவானா பல்லுயிர் தொகுதி
C) வெப்பமண்டல காடுகள் பல்லுயிர் தொகுதி D) மிதவெப்ப மண்டலப் புல்வெளி பல்லுயிர் தொகுதி
E) விடை தெரியவில்லை

78) பொருத்துக.
a. முக்கோண வடிவ குடியிருப்பு - 1. சமவெளி (ம) பள்ளத்தாக்கு
b. வட்டவடிவ குடியிருப்பு - 2. சாலை (ம) ஆற்றங்கரை ஓரம்
c. நேர்கோடு குடியிருப்பு - 3. ஏரிகள், குளங்கரை சுற்றி
d. செவ்வக வடிவ குடியிருப்பு - 4. ஆறுகள் ஒன்றாக சேரும் இடம்
A) 4 3 1 2 B) 1 2 3 4 C) 2 1 3 4 D) 4 3 2 1 E) விடை தெரியவில்லை

79) கூற்று 1 : புவி அதிர்வுகளை பதிவு செய்யும் கருவி சீஸ்மோமீட்டர் எனப்படும்.
கூற்று 2 : நில அதிர்வு பற்றி படிப்பதற்கு சீஸ்மோலஜி எனப்படும்.
A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 மட்டும் சரி D) 2 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

80) உலகிலேயே பெரிய குருட்டு ஆறு என அழைக்கப்படுவது?
A) கன்வர் ஏரி B) சிக்காட் ஏரி C) ஓல்டு பெய்த்புல் D) சிலிகா ஏரி E) விடை தெரியவில்லை

81) சரியான இணையைத் தேர்ந்தெடு.
A) குடியரசுத் தலைவர் அரசாங்கம் - இந்தியா.
B) நாடாளுமன்ற முறை அரசாங்கம் - இங்கிலாந்து.
C) நேரடி மக்களாட்சி - நெதர்லாந்து.
D) மறைமுக மக்களாட்சி - சுவிட்சர்லாந்து.
E) விடை தெரியவில்லை

82) அழுத்தக் குழுக்கள் என்ற சொல் எந்த நாட்டிலிருந்து உருவாகிறது?
A) அமெரிக்கா B) இந்தியா C) இங்கிலாந்து D) பிரான்ஸ் E) விடை தெரியவில்லை

83) தவறான கூற்றைத் தேர்ந்தெடு.
A) மனித உரிமைகள் பிறப்பின் அடிப்படையில் இயற்கையாக அமையப்பெற்ற அடிப்படை உரிமையாகும்.
B) சிவில் உரிமைகள் சமூகத்தினால் உருவாக்கப்படுகின்றன.
C) மனித உரிமைகள் நாட்டிற்கு நாடு அல்லது அரசாங்கத்திற்கு அரசாங்கம் பெரிதும் வேறுபடுகின்றன.
D) மனித உரிமைகள் உலகில் உள்ள அனைத்து மக்களுக்கு மற்றும் அனைத்து நாடுகளுக்கும் உரியதாகும்.
E) விடை தெரியவில்லை

84) பின்வரும் கூற்றுகளைக் காண்க.
கூற்று 1 : உள்ளாட்சி அமைப்பு இந்தியாவில் தொன்று தொட்டு காணப்படும் கருத்துரு ஆகும்.
கூற்று 2 : இது பிற்காலச் சோழர்கள் (அ) தஞ்சை சோழப் பேரரசு காலத்தில் உச்சநிலையை அடைந்தது.
கூற்று 3 : இடைக்காலத்தில் நில பிரபுத்துவத்தின் முறையின் தாக்கத்தால் உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவம் குறைந்தது.
A) 1 (ம) 2 B) 1 மட்டும் C) 3 மட்டும் D) 1, 2 (ம) 3 E) விடை தெரியவில்லை

85) "இன, பாலின, தேசிய, இனக்குழு, மொழி, மதம் அல்லது வேறு தகுதி அடிப்படையைப் பொறுத்து மாறுபடாமல் மனிதர்களாகப் பிறக்கும் அனைவருக்கும் மரபாக இருக்கும் உரிமையே மனித உரிமை. எவர் ஒருவருக்கும் இந்த உரிமையை வழங்குவதில் பாரபட்சம் காட்டக் கூடாது" என்று மனித உரிமையை வரையறுத்தது யார்?
A) ஐ.நா. சபை B) உலக சுகாதார அமைப்பு C) UDHR D) தேசிய மனித உரிமைகள் கழகம்
E) விடை தெரியவில்லை

86) சரியான கூற்றைத் தேர்ந்தெடு.
1. ரிப்பன் பிரபுவின் தீர்மானம் "உள்ளாட்சி அமைப்புகளின் மகாசாசனம்" என்றழைக்கப்படுகிறது.
2. இவர் "இந்தியாவின் உள்ளாட்சி அமைப்புகளின் தந்தை" என அழைக்கப்படுகிறார்.
A) 1 மட்டும் B) 2 மட்டும் C) 1 (ம) 2 D) எதுவுமில்லை E) விடை தெரியவில்லை

87) எந்த ஷரத்து கிராமப் பஞ்சாயத்துகளின் அமைப்பு பற்றிக் கூறுகிறது?
A) ஷரத்து 40 B) ஷரத்து 48 C) ஷரத்து 41 D) ஷரத்து 48A E) விடை தெரியவில்லை

88) மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே உள்ள நிதி உறவுகள் பற்றிக் கூறும் சட்டப்பிரிவு
A) சட்டப்பிரிவு 256 முதல் 263 வரை B) சட்டப்பிரிவு 245 முதல் 255 வரை
C) சட்டப்பிரிவு 265 முதல் 290 வரை D) சட்டப்பிரிவு 268 முதல் 294 வரை
E) விடை தெரியவில்லை

89) பொருத்துக.
a. மத்தியப் பட்டியல் - 1. 61 துறைகள்
b. மாநிலப் பட்டியல் - 2. 52 துறைகள்
c. பொதுப் பட்டியல் - 3. 100 துறைகள்
A) 3 1 2 B) 1 2 3 C) 2 3 1 D) 3 2 1 E) விடை தெரியவில்லை

90) பொருத்துக.
a. பல்வந்தராய் மேத்தா குழு - 1. இரண்டு அடுக்கு முறை
b. அசோக் மேத்தா குழு - 2. 73 மற்றும் 74வது திருத்தச்சட்டம்
c. ஜி.வி.கே. ராவ் குழு - 3. மூன்று அடுக்கு முறை
d. எல்.எம்.சிங்வி குழு - 4. வேரற்ற புற்கள்
A) 3 1 4 2 B) 1 2 4 3 C) 2 4 1 3 D) 4 3 2 1 E) விடை தெரியவில்லை

91) VVPAT தொடர்பாக கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு.
1. வாக்காளர் சரிபார்க்கும் காகித தணிக்கைச் சோதனை - VVPAT.
2. 2014ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இந்தியத் தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியது.
A) 1 மட்டும் சரி B) 2 மட்டும் சரி C) 1 (ம) 2 சரி D) 1 (ம) 2 தவறு
E) விடை தெரியவில்லை

92) இந்தியக் குடியரசுத்தலைவர் தேர்தலில் பங்கு பெறுபவர்கள் பற்றிய கூற்றுகளைக் கவனி.
1. பாராளுமன்றத்தின் மக்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்.
2. பாராளுமன்றத்தின் மக்களவையின் நியமன உறுப்பினர்கள்.
3. பாராளுமன்றத்தின் மாநிலங்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்.
4. பாராளுமன்றத்தின் மாநிலங்களவையின் நியமன உறுப்பினர்கள்.
5. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்.
A) கூற்று 1, 3, 5 மட்டும் சரி B) கூற்று 1, 2, 3 மட்டும் சரி C) கூற்று 2, 4 மட்டும் சரி
D) கூற்று 2, 3 மட்டும் சரி E) விடை தெரியவில்லை

93) இந்திய பணம் பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு.
1. 1947ஆம் ஆண்டுவரை ஆறாம் ஜார்ஜின் உருவம் பொறித்த பணமே புழக்கத்தில் இருந்தது.
2. இந்தியாவில் 1917ல் தான் முதன் முதலில் ஒரு ரூபாய் மற்றும் இரண்டு ரூபாய் நோட்டுகள் தயாரித்து வெளியிடப்பட்டன.
A) 1 மட்டும் B) 2 மட்டும் C) 1 (ம) 2 D) இவற்றில் எதுவுமில்லை E) விடை தெரியவில்லை

94) கூற்று (A) : இரண்டாம் துறை (ம) மூன்றாம் துறையின் முன்னேற்றம் ஒரு வகையில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது.
காரணம் (R) : இதற்கும் அரசின் "திறன் நகரம்" (Smart City) திட்டத்திற்கும் நேரடி தொடர்புள்ளது.
A) (A) மற்றும் (R) சரி, (R) ஆனது (A)ன் சரியான விளக்கம்.
B) (A) மற்றும் (R) சரி, (R) ஆனது (A)ன் சரியான விளக்கம் அல்ல.
C) (A) சரி ஆனால் (R) தவறு.
D) (A) தவறு ஆனால் (R) சரி.
E) விடை தெரியவில்லை

திண்ணை

திண்ணை பயிற்சிப் பட்டறை, 57A, ஜவகர் மெயின்ரோடு, N.R.T. நகர்,தேனி. 99409 70325 Thinnai competitive Exam YouTube Thinnai Theni

95) தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) ஒழுங்கமைக்கப்பட்ட துறைகள் அரசாங்கத்துடனோ அல்லது அதற்கான அதிகாரத்துடனோ இணைக்கப்பட்டிருக்கும்.

B) ஒழுங்கமைக்கப்படாத துறைகள் வீட்டு உபயோகப் பொருட்கள், சிறு மற்றும் குடிசைத் தொழில்கள்.

C) ஒழுங்கமைக்கப்படாத துறைகள் சட்டத்திலுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறையின்படி செயல்படுகிறது.

D) மேற்கண்ட அனைத்தும்.

E) விடை தெரியவில்லை

96) மிக அதிகமான எண்ணிக்கையில் வெளி இடப்பெயர்வை கொண்ட தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்கள் எவை?

1. கோயம்புத்தூர் 2. சென்னை 3. சேலம் 4. கிருஷ்ணகிரி 5. இராமநாதபுரம்

A) 1, 2 (ம) 4 B) 2, 3 (ம) 5 C) 1, 2 (ம) 5 D) அனைத்தும் E) விடை தெரியவில்லை

97) மனித மேம்பாட்டு குறியீடு அளவிட பின்வருவனவற்றுள் எந்த குறியீடுகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது?

1. பிறப்பின் வாழ்நாள் எதிர்பார்ப்பு 2. நல்ல ஆட்சி

3. வயது வந்தோரின் கல்வியறிவு 4. வாழ்க்கைத் தரம்

A) 1, 2 (ம) 4 B) 1, 3 (ம) 4 C) 3 (ம) 4 D) 2 (ம) 4 E) விடை தெரியவில்லை

98) இந்திய ரூபாய்களுக்கான புதிய பணக்குறியீடு எப்பொழுது நடைமுறைக்கு வந்தது?

A) ஆகஸ்ட் 15, 2010 B) ஜனவரி 26, 2010 C) ஜூலை 15, 2010 D) ஜூன் 30, 2010

E) விடை தெரியவில்லை

99) மொத்த தேசிய மகிழ்ச்சி தொடர்புடைய கீழ்க்காணும் கூற்றைக் கவனி.

1. பூட்டான் அரசின் அரசமைப்பில் இடம்பெற்றுள்ள இக்கருத்து ஜூலை 18, 2008ல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2. மொத்த தேசிய மகிழ்ச்சி என்ற பதம் பூட்டானின் நான்காம் அரசரான ஜிக்மே சிங்கியே வான்சுக் என்பவரால் 1970இல் உருவாக்கப்பட்டது.

3. மையக் கருத்துகள் - நல்ல ஆட்சி, சமூகப் பொருளாதார வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு.

A) கூற்று 1, 4 மட்டும் சரி B) கூற்று 2, 3 மட்டும் சரி C) அனைத்தும் தவறு

D) அனைத்தும் சரி E) விடை தெரியவில்லை

100) "மறைநீர்" தொடர்பான சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. மறைநீர் என்னும் பதம் 2000ஆம் ஆண்டு டோனி ஆலன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

2. ஒரு மெட்ரிக் டன் கோதுமை உற்பத்தி செய்வதற்கு சராசரியாக 1340 கியூபிக் மீட்டர் நீர் தேவைப்படுகிறது.

3. உலகின் நான்காவது மிகப்பெரிய மறைநீர் ஏற்றுமதியாளராக இந்தியா விளங்குகிறது.

A) 1 மட்டும் B) 2 மட்டும் C) 1 (ம) 2 D) 1, 2 (ம) 3 E) விடை தெரியவில்லை

**20th Batch-Test 5 - Answer Key**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| **B** | **A** | **A** | **B** | **A** | **C** | **D** | **D** | **C** | **B** |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| **B** | **C** | **A** | **D** | **D** | **A** | **D** | **A** | **C** | **B** |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| **B** | **B** | **D** | **C** | **B** | **C** | **C** | **B** | **B** | **C** |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| **C** | **D** | **D** | **B** | **D** | **D** | **A** | **D** | **C** | **C** |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| **D** | **C** | **A** | **A** | **C** | **D** | **D** | **A** | **D** | **C** |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| **B** | **C** | **A** | **D** | **A** | **D** | **A** | **D** | **D** | **D** |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| **C** | **C** | **C** | **D** | **B** | **D** | **B** | **D** | **B** | **B** |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| **C** | **B** | **D** | **C** | **B** | **C** | **D** | **D** | **A** | **B** |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| **B** | **A** | **C** | **D** | **A** | **C** | **A** | **D** | **A** | **A** |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| **C** | **A** | **C** | **A** | **C** | **C** | **B** | **C** | **D** | **B** |